Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 65

வெள்ளிக்கிழமை
30 ஜனவரி 2026

தை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நாணய நிதிய பணிப்பாளர் பெப்ரவரியில் இலங்கைக்கு!

கொழும்பு, ஜன. 30
சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகி »11

வடக்கில் இடம்பெற்ற

## ஊடகவியலாளர்கள் கொலை; விசாரணைகள் துரிதகதியில்!



### ஆதாரங்களும் கிடைத்துள்ளன
### இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 30**

**வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் படுகொலை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.** »11

## 'பிரஜா சக்தி' திட்டம் ஜனநாயக விரோதம்

### உடன் கைவிடப்பட வேண்டும் என பரு. பிரதேசசபையிலும் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன. 30
பிரஜாசக்தி திட்டம் ஜனநாயக விரோதமானது. ஆதலால், அது உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் என்று, பருத்தித்துறை பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரஜாசக்தி திட்டத்துக்கு »11

## நன்கு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பே கிவுல் ஓயா

### தமிழர் மரபுரிமைப் பேரவை கண்டனம்

கொழும்பு, ஜன. 30
சர்ச்சைக்குரிய கிவுல் ஓயா திட்டமானது, தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற நன்கு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது இவ்வாறு தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர் லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் »11

## தமிழரசின் மூத்த தலைவர் மாவைக்குச் சிலை திறப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 30
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் நினைவுச்சிலை மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. »11

## இன நல்லிணக்கத்தை மேம்படுத்த அக்கறை!



### அமைச்சர் சந்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30
இன நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார். »11

சுதந்திரதினக் கொண்டாட்டம்

## சர்வதேசப் பிரமுகர்கள் எவருக்கும் அழைப்பில்லை

கொழும்பு, ஜன. 30
இலங்கையின் சுதந்திர தின விழாவுக்கு சர்வதேசப் பிரமுகர்கள்எவரும்அழைக்கப்படவில்லை. ஜனாதிபதி அநுர தலைமையிலேயே நிகழ்வுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திர தினத்துக்கான »11

குப்பைக்குத் தீவைத்தபோது விபரீதம்

## தீக்காயங்களுக்கு உள்ளான மூதாட்டி நேற்று உயிரிழப்பு!



யாழ்ப்பாணம், ஜன. 30
குப்பை கொளுத்தியபோது, தவறுதலாக வீட்டின் மீது தீ பற்றியதால் எரிகாயங்களுக்கு உள்ளான மூதாட்டி, சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். அரியாலை பகுதியைச் சேர்ந்த பரமசிவம் பரமேஸ்வரி »11

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக நாளை மீண்டும் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 30
தையிட்டி திஸ்ஸ விகாரையை உடனடியாக அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் நாளையும், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் திஸ்ஸ விகாரைக்கு அருகாக போராட்டம் இடம்பெறவுள்ளது. »11

## டிப்பர் – மோ.சைக்கிள் விபத்து பெண்ணொருவர் பரிதாபச் சாவு

### பளையில் துயரம்

கிளிநொச்சி, ஜன. 30
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், டிப்பரும் மோட்டார் சைக்கிளும் நேற்று விபத்துக்கு உள்ளானதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த பெண் உயிரிழந்தார். சோரன்பற்று பகுதியைச் சேர்ந்த குமாரசாமி செல்வவதி (வயது-63) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
யாழ்ப்பாணத்தில் »11

## யாழ்ப்பாணம் நகரப் பகுதியின் குளங்களைச் சீரமைக்கத் திட்டம்

### கொழும்பிலிருந்து வந்த குழு ஆராய்வு

முச்சந்தி முனி

"ஏதோ இவை தங்கட ஆசைக்கு தீர்மானம் போட்டாலும், அவைள் தாங்கள் நினைச்சபடிதானே செய்வினம் கண்டியளோ"

யாழ்., ஜன. 30
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள குளங்கள் மற்றும் வடிகால்களை மறுசீரமைப்பது தொடர்பில், கொழும்பிலிருந்து வந்துள்ள விசேட குழுவொன்று ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு »11

வல்வெட்டித்துறையில்

## தலைவர் பிரபாவின் பெற்றோருக்கு நினைவாலயம் அமைக்க ஏன் தடை?

யாழ்ப்பாணம், ஜன. 30
தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பிறந்து, வளர்ந்த காணியில் அவரது பெற்றோர் ஞாபகார்த்தமாக வேலுப்பிள்ளை - பார்வதி அம்மா நினைவாலயம் அமைக்க அனுமதி வழங்கப்படாமைக்கு, பிரபாகரனின் சகோதரியான ம.ஜெகதீஸ்வரி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.
இது தொடர்பில், வல்வெட்டித்துறை நகரபிதா எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:
எனது காணியில், எனது பெற்றோரின் நினைவாக நினைவாலயம் அமைப்பதற்கு, எனது அற்றோனித் தத்துவக்காரரான ந.அனந்தராஜன் என்பவரால் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் அனுமதிகோரி விண்ணப்பிக் »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 4331
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 23 | 24 | 35 | 65
விசேட எழுத்து: M

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 1398
வெற்றி இலக்கினம்: கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 08 | 11 | 49 | 62

**NLB ஜய**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0357
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 3 | 9 | 2 | 1

**மெகா பவர்**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2437
ஆங்கில எழுத்து: S
சுப்பர் இலக்கம்: 19
வெற்றி இலக்கங்கள்: 06 | 57 | 63 | 68

**மஹஜன சம்பத**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 6089
ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 7 | 9 | 0 | 9 | 5 | 9

**தன நிதானய**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 2119
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 51 | 61 | 64 | 74
விசேட எழுத்து: P

**சுப தவசக்**
திகதி: 29.01.2026
சீட்டிழுப்பு இலக்கம்: 0205
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 20 | 47 | 63

# ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் பயங்கரவாத மாற்றுச்சட்டம் தீங்கு



### மன்னார் மீனவ கூட்டுறவுச் சமாசத்தின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

**அரசு கொண்டுவந்துள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைக் காப்பாற்றக்கூடிய புதிய சட்டவரைவானது ஒட்டுமொத்தமாக இலங்கை வாழ் மக்களுக்கு பொருத்தமற்றது. இந்தச் சட்டம் எந்தத் திருத்தமுமின்றி நீக்கப்படவேண்டும்.**

இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின், மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் பெண்கள் அமைப்பு மன்னாரில் ஏற்பாடுசெய்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சட்டம் ஒட்டுமொத்தமாக இலங்கை வாழ் மக்களுக்கு பொருத்தமற்றது.பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எவ்வாறு நீக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்தோமோ, அதேபோன்றுதான் இந்தச் சட்டமும் எந்தத் திருத்தமும் இன்றி நீக்கப்படவேண்டும்.

புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள சட்டம் ஜனாதிபதி,ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றுக்கு மாத்திரமே முழுமையான அதிகாரத்தை வழங்குகிறது. போராட்டம் மற்றும் கருத்துக் கூறுதல் என்பது ஜனநாயக உரிமை. அந்த உரிமையை இல்லாது செய்கிற இந்தச் சட்டம் தேவையற்றது- என்றார். (ச-56)

**சுபிரி தன சம்பத**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 0797
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கம்: 8 | 2 | 3 | 1 | 1 | 2

**Super Ball**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 3063
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கம்: 09 | 15 | 19 | 65

**சனிதா**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: X
வெற்றி இலக்கம்: 09 | 34 | 37 | 64
வெற்றி வாரம்: 5224

**SASIRI**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 0893
வெற்றி இலக்கம்: 01 | 13 | 18

**லக்ன ராசி**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
மீனம்
வெற்றி இலக்கம்: 08 | 09 | 28 | 30
சீட்டிழுப்பு வாரம்: 4775

**KAPRUKA**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: T
சுப்பர் இலக்கம்: 12
வெற்றி இலக்கம்: 34 | 42 | 43 | 62
வெற்றி வாரம்: 2239

**அத கோடிபதி**
திகதி: 29.01.2026
தினம்: வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கம்: 17 | 31 | 36 | 42
வெற்றி வாரம்: 2889

# பாடசாலை காணொலிச் சர்ச்சை; கல்வியமைச்சு விசாரணை!

கொழும்பு,ஜன.30

கொழும்பின் முன்னனிப் பாடசாலையொன்றின் சிரேஷ்ட மாணவத் தலைவன் மற்றும் நான்கு ஆசிரியர்கள் விவகாரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பரவிவரும் சர்ச்சைக்குரிய காணொலி குறித்து கல்வி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தக் காணொலி சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சம்பவம் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து உடனடியாக விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கல்விச் செயலாளர் நாலக கலுவேவா, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார். அதிபர் வழங்கும் அறிக்கையின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும், தவறிழைத்தவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்விச் செயலாளர் உறுதியளித்துள்ளார். இதேவேளை கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய அண்மையில் குறித்த பாடசாலைக்கு நிகழ்வொன்றுக்காகச் சென்றிருந்த நிலையில், இந்த விவகாரம் மீண்டும் திட்டமிட்டு கிளப்பப்பட்டுள்ளதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. (ச-இ)



# புகைத்தல் பொருள்கள் உணவகங்களில் தடை!


### பருத்தித்துறை நகரசபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.30

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட உணவுகையாளும்நிலையங்களில்புகையிலைசார் உற்பத்திப்பொருள்களின் விற்பனை மற்றும் உபயோகிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறும் உரிமையாளர்கள்மீது கடும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தெரிவிக்கையில்,

உணவு கையாளும் நிலையங்கள் சிலவற்றில் புகையிலைசார் உற்பத்திப்பொருள்களின் விற்பனை மற்றும் உபயோகம் இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது நகரசபை எல்லைக்குட்பட் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களுக்கு தினமும் வந்துசெல்கின்றனர். எனவே உணவு கையாளும் நிலையங்களிலும் புகையிலைசார் உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வதும் உபயோகிக்க இடம் கொடுப்பதும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான அறிவுறுத்தல் சகல உணவு கையாளும் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-100)



# ஆயுள்வேத வைத்திய நிலையம் மெலிஞ்சிமுனையில் விரைவில்

யாழ்ப்பாணம்,ஜன.30

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மெலிஞ்சிமுனைப் பகுதியில்மக்களின்நீண்டகாலத் தேவையாக இருந்த ஆயுள்வேத வைத்திய நிலையம் ஒன்று மிக விரைவில் அமைக்கப்படவுள்ளது. கரம்பொன் பங்குத்தந்தை அருட்தந்தை தயாகரன் மற்றும் அப்பகுதிப் பொது அமைப்புகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நிலையம் அமையவுள்ளது. இந்த வைத்திய நிலையம் ஊர்காவற்றுறைப்

பிரதேசசபையின் மேற்பார்வையின்கீழும், மெலிஞ்சிமுனை பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளின் கண்காணிப்பிலும் இயங்கவுள்ளது. இதற்கான இடத்தை ஊர்காவற்றுறைப் பிரதேசசபை உறுப்பினர் புவி, அருட்தந்தை தயாகரன், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சட்டவரைவு விவகாரத்தில் தமிழ்க்கட்சிகளே ஒன்றுபடுங்கள்

## ஈ.பி.ஆர்.எல்.எப். அழைப்பு

**யாழ்ப்பாணம், ஜன.30**

**அரசாங்கம் கொண்டுவர யோசிக்கும் புதிய சட்டவரைவில், தமிழ்மக்களின் அரசியல் தீர்வு மற்றும் அதில் அடங்கவேண்டிய விடயங்கள் தொடர்பில், சகல தமிழ்க் கட்சிகளும் கருத்தொற்றுமையாக, ஒருமித்த ஒரு தீர்வுத்திட்டத்தை அரசாங்கத்திடம் கையளிக்கவேண்டும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ். க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

கட்சியின் அரசியல் குழு, மெய்நிகர் மூலமாகக் கூடியது. அதில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதிகளால், பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டு, பல்வேறு வரைபுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராய்ந்து, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வரைபை அனைத்துக்கட்சிகளும் இணைந்து உருவாக்கவேண்டும் என்று சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது. அதேபோன்று நாடு மிகவும் வங்குரோத்தான சூழ்நிலையில் இருக்கின்றபோதும், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய கிவுல் ஓயா என்ற புதிய நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்கி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள சிங்களக் குடியேற்றங்களுக்கு மேலதிகமாக, இன்னமும் சிங்களக் குடியேற்றங்களை விஸ்தரிக்கும் நோக்கில் அமுல்படுத்த எத்தனிக்கும் திட்டத்தை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நிராகரிக்கவேண்டும். இதற்கு அரசாங்கம் செலவு செய்ய உத்தேசித்துள்ள 23, 500 கோடி ரூபாவை எப்படிப் புரட்டப்போகிறார்கள் என்பதை அரசாங்கம் இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கான அழுத்தங்களை ஏனைய கட்சிகளுடன் இணைந்து உருவாக்கவேண்டும். மாகாணசபைத்தேர்தலின் அவசியத்தை இராஜதந்திர சமூகத்துக்கு எடுத்துரைக்கவேண்டும்-என்றுள்ளது. (சு-26)

## மதகுரு மீது தாக்குதல்; அறுவருக்குப் பிணை

கொழும்பு,ஜன.30

கத்தோலிக்க அருட்சகோதரர் ஒருவரைத் தாக்கிய சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டிருந்த ஆறு பொலிஸ் அதிகாரிகளும் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அறுவரும் தலா ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுயநிர்ணய அடிப்படையில் தமிழருக்குத் தீர்வு வேண்டும்

*ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஜன.30

தேசிய இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்று ஐக்கிய சோசலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பில் விசேட கூட்டமொன்றை அந்தக்கட்சி எதிர்வரும் 13ஆம் திகதி யாழ். நல்லூரில் நடத்தவுள்ளது.

இதில் கட்சித் தலைவரான சிறிதுங்க ஜயசூரிய சிறப்புப் பேச்சாளராக பங்கேற்று, தமிழ் மக்களுக்கு கௌரவமானதொரு தீர்வை வழங்குமாறு வலியுறுத்தவுள்ளார். அத்துடன் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும், வடக்கு மீனவ சமூகத்தின் பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படவேண்டும் எனவும் இதன்போது எடுத்துரைக்கப்படவுள்ளது. (ச-44)



## சஜித் - ரணில் சந்திப்பு பெப்ரவரி ஆரம்பத்தில்

கொழும்பு, ஜன.30

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு விரைவில் இடம்பெறவுள்ளது உறுதியாகியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி உதயமாகி எதிர்வரும் 10ஆம் திகதியுடன் ஆறாண்டுகள் ஆகின்றன. அதற்கு முன்னதாக இருவரும் நேரடிச் சந்திப்பில் ஈடுபடுவார்கள் எனத் தெரியவருகின்றது.

அதில் எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் எனவும் அறியமுடிகின்றது. இரு கட்சிகளும் இணைவுக்கு இணங்கி இருந்தாலும் தனிக்கட்சியா, கூட்டணியா என்பது பற்றி இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை. அதனால் ரணில் மற்றும் சஜித்துக்கிடையிலான சந்திப்பே அடுத்த கட்டத்தை நிர்ணயிக்கும் என கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஏ-44)

## பாதாளக்குழுவினர் சிறைக்குள் மோதல்

காலி,ஜன.30

காலி சிறைச்சாலைக்குள் கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலின் தலைவர்களான 'கரந்தெனிய சுத்தா' என்பவரின் சகாக்களுக்கும் 'அகமி பொடி அஜித்' என்பவரின் சகாக்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின்போது 'கரந்தெனிய சுத்தா' என்பவரின் சகா ஒருவரே காயமடைந்துள்ளார்.




## இன்னும் கொஞ்சம் பஸ்ஸை விட்டால் தான் என்ன?

நேற்றுக் காலைமை வவுனியாவில இருந்து செட்டிகுளம் போன சீ.ரி.பி. பஸ்ஸை பார்த்திருந்தீங்களெண்டால், உங்களுக்குப் 'பக் ... பக்... கெண்டு' ஹார்ட் அடிச்சிருக்கும். பள்ளிக்கூடப் பெடியள் பஸ்ஸுக்க நிக்க இடமில்லாமம் வெளியால 'புட்போர்ட்டில'யும், வெளிக் கண்ணாடிக் கம்பியளிலையும் பிடிச்சுத் தொங்கிக் கொண்டு போகினம். அந்தப் பெடியள் ஆருக்கும் 'கலர்ஸ்' காட்டுறதுக்காகவோ, இல்லாட்டி 'எப்பிடி எங்கட சாகசம்?'எண்டு வீடியோ எடுத்து ரீல்ஸ் போடுறதுக்காகவோ அப்பிடி தொங்கிக்கொண்டு போகேலை. அந்த பஸ்ஸை விட்டால் பள்ளிக்கூடம் போக வேற பஸ் இல்லை எண்டதால, விழுந்தாலும் பரவாயில்லை எண்டு இப்பிடித் தொங்கிக் கொண்டு போய்வருகினம். நேற்றுமட்டும் தான் இப்பிடியெண்டில்லை. ஒவ்வொருநாளும் இதேமாதிரித்தான் அவையள் உயிரைப் பணயம் வைச்சுத்தான் பள்ளிக்கூடத்துக்குப் போய்வரவேண்டிக் கிடக்கு. வீட்டையிருந்து வெளிக்கிடேக்க வெள்ளை வெளீரெண்டு, அயர்ன் பண்ணின மடிப்புக் குலையாமல் போட்ட யூனிபோர்ம், பஸ்ஸை விட்டு இறங்கேக்க பார்த்தால் வேறமாதிரி மாறி இருக்கும், பாலைவனத்துக்க பத்துநாள் அலைஞ்சு திரிஞ்சுபோட்டு வந்தவையின்ர உடுப்புக்கூட பரவாயில்லை எண்டு சொல்லுற அளவுக்கு, பள்ளிக்கூட யூனிபோர்மில புழுதியெல்லாம் படிஞ்சு, கசங்கிப் போயிருக்கும்.

இப்பிடி அந்தப் பெடியள் 'ரிஸ்க்' எடுக்காமல், நிம்மதியாப் பள்ளிக்கூடத்துக்குப் போய்வரோணுமெண்டால் பஸ் சேவையைக் கூட்டவேணும். ஆனால் அப்பிடி பஸ் சேவையைக் கூட்டுங்கோ எண்டு கேட்டால் "கூட பஸ்ஸை விடோணுமெண்டு விருப்பம் தான். ஆனால் எங்களிட்ட அதுக்கு பஸ்ஸும், ரைவர்மாரும் இல்லையே" எண்டு ஒற்றைச் சொல்லில சீ.ரி.பி. டிப்போக்காரர் கைவிரிக்கினமாம். இத்தனைக்கும் ஒரு ரைவரும், நாலு கொண்டக்டர்மாரும் அங்க தங்கட வேலையைப் பாக்காமல் கிளறிக்கல் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கினம். உண்மையில வவுனியா டிப்போக்காரர் நினைச்சால் பஸ்சேவையைக் கூட்டஏலும். ஆனால்அவைக்கு அதுக்குமனமில்லை. அதால கடைசிமட்டும் வவுனியாப் பிள்ளையள் செட்டிகுளம் பஸ்ஸில தொங்கிக்கொண்டு போகவேணுமெண்டு தான் விதி போல. அதிகாரிமார், தங்கட பிள்ளையளை இப்பிடி பஸ்ஸின்ர 'புட்போர்ட்டிலையும்'வெளிக்கண்ணாடிக் கம்பியளிலையும் தொங்கிக்கொண்டு போகவிடுவினமோ? இப்பிடிப் போகேக்க ஏதுமொரு அசம்பாவிதம் நடந்த பிறகு 'நிவாரணம் குடுக்கிறம், விசாரணை செய்யிறம், நடவடிக்கை எடுக்கிறம்' எண்டு அறிக்கை விட மட்டும் ஆக்கள் முன்வரிசையில நிப்பினம்.

செட்டிகுளம் மாதிரி வவுனியா ரவுணில இருந்து நாப்பது, அம்பது கிலோமீற்றர் தூரத்தில இருக்கிற பகுதியளுக்கு பஸ் சேவை 'மட்டுமட்டுத்தான்'. அதிலயும் சில ரைவர், கொண்டக்டர்மார் 'சீசன் ரிக்கெற்'வச்சிருக்கிற பிள்ளையளைக் கண்டாலே, ஏதோ பேயைக்கண்டமாதிரி அந்த இடத்தில நிப்பாட்டாமல் பறந்தடிச்சுக்கொண்டு ஓடிடுவினம். அதால இந்த பஸ்ஸை விட்டால் பள்ளிக்கூடம் தொடங்க முதல் போகேலாது எண்ட பயத்திலதான், அந்தப் பிள்ளையள் உயிரைப் பணயம் வச்சு இப்பிடித் தொங்கிக் கொண்டு போகினம்.'வெள்ளம் வர முதல் அணைகட்ட வேணும்'. ஏதும் நடக்கக்கூடாதது நடந்த பிறகு ஒப்பாரி வைக்காமல், பள்ளிக்கூடங்கள் தொடங்கிற நேரத்துக்கும் முடியுற நேரத்துக்கும் மட்டுமாவது மேலதிகமா ரண்டு மூண்டு பஸ்ஸை ஓட விட்டால் இந்தப்பிரச்சினை தீர்ந்திடும். அதை விட்டிட்டு, 'மாற்றம் கொண்டு வாறம்' எண்டு மேடையில கத்திறதால ஒரு பிரியோசனமும் இல்லை. உரியவை கண்ணைத் திறந்து ஏதும் செய்வினமோ? இல்லாட்டி ஒரு உயிர் போற வரைக்கும் காத்திருப்பினமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு
18 . 06 . 1948

இறப்பு
28 . 01 . 2026

### கணபதி தெய்வேந்திரம்

அம்பிகாபதி லேன் சங்கானையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி தெய்வேந்திரம் அவர்கள் கடந்த 28.01.2026 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - பாக்கியரத்தினம் தம்பதியரின் மருமகனும், இந்திராணியின் பாசமிகு கணவனும், காலஞ்சென்ற சுதர்ஜா மற்றும் அன்பு மகன் கோபிநாத் (Manager - SLIC Life, Jaffna branch) ஆகியோரின் தந்தையும், அஜந்தா (M.A University of Jaffna) அவர்களின் பாசமிகு மாமனாரும், ரிகர்ஷன், லமிர்ஷன் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், சிவபாக்கியம், சிவக்கொழுந்து மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஞானசீலன், நேசசீலன், தனசீலன், குணசீலன், சதீபா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2026) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு கரச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன் - 0777 3766 10

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31106) A

## சுழிபுரம் பாடசாலையில் புதிய கட்டடம் திறப்பு!

யாழ்ப்பாணம் சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலையின் புதிய இரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. மருத்துவக் கலாநிதி ஆறுமுகம் ராஜையா மற்றும் குமாரிபுஷ்பதேவி ராஜையா தம்பதிகளின் ஞாபகார்த்தமாக ராஜையா குடும்ப அறக்கட்டளையினரால் நிதியீட்டம் செய்யப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் இந்தக் கட்டடம் புதித்தாக நிர்மாணிக்கப்பட்டுள் ளது. பாடசாலை அதிபர் வி.பிரகலாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, வலிகாம வலயக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

குழந்தை பராமரிப்பாளர் தேவை
திருநெல்வேலியில் குழந்தையை பராமரிப்பதற்கு பகுதிநேரத்திற்கு பராமரிப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 581 4230, 077 491 0234
(CS60590) J-1

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL.
AFTER O/L'S, A/L'S?
MEET OUR LECTURERS TO PLAN YOUR HIGHER EDUCATION PATHWAY
WELCOME TO
JAFFNA EDUCATION FAIR 2026
Your Future Begins Here...
JAN 31 - FEB 01
VALAMPURI HOTEL, JAFFNA
STALL NO - C2
இங்கு வருகை தந்து பதிவு செய்யும் மாணவர்களுக்கு
"15% - 20% ON THE SPOT REGISTRATION" சலுகை வழங்கப்படும்
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
077 147 1471 021 7534 807

NLB ஜய JAYA
2025 நிதிப்பங்களிப்பு
சிரம வாசனா நிதியத்துக்கு ரூபாய் 9.6 கோடி
ரூபாய் 14.4 கோடி
தேசிய சிறுநீரக நிதியத்துக்கு ரூபாய் 6.7 கோடி
ரூபாய் 4.9 கோடி
2025 இலே வெற்றியாளர்கள்
ரூ.500,000 வெற்றியாளர்கள் 433
ரூ.50,000 வெற்றியாளர்கள் 10,921
வெற்றியாளர்களிடையில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை
ரூ.201 கோடி
தேசிய லொத்தர்

JAFFNA EDUCATION FAIR 2026
Your Future Begins Here...
STALL E3 STALL E4

JAFFNA EDUCATION FAIR 2026
31 JANUARY 01 FEBRUARY
VALAMPURI HOTEL
- கல்வி வழிகாட்டல்கள்
- கல்வி கடன் வசதிகள்
- வெளிநாட்டு கல்வி தொடர்பான வழிகாட்டல்கள்
- சட்டக் கல்வி தொடர்பான வழிகாட்டல்கள்
- தாதியர் பயிற்சி தொடர்பான விளக்கங்கள்
கல்வி எதிர்காலம் வெற்றி
ESOFT UNI
FACULTY OF COMPUTING
FACULTY OF BUSINESS & LAW
FACULTY OF ENGINEERING
FACULTY OF LIFE SCIENCES
FACULTY OF ART & DESIGN
FACULTY OF EDUCATION, LANGUAGES & SOCIOLOGY
ESU ESOFT UNI
No 609, Hospital, Rd
JAFFNA
076 8700 400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை





## குழந்தைகளுக்கு ஒவ்வாத தேசமா?

ஒரு நாட்டின் உண்மையான வளம் அதன் எதிர்காலச் சந்ததியினரே. அவர்கள் உடல், உள ஆரோக்கியத்துடன் வளர்வதே நாட்டின் எதிர்காலத்தை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச்செல்லும். ஆனால், அண்மையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வெளியிட்டுள்ள தரவுகள், இந்த நாடு சிறுவர்களுக்குப் பாதுகாப்பற்றதாக மாறியியுள்ளதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் சிறுவர் தொடர்பாக 10 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பது சாதாரணமாகக் கடந்துசெல்லும் விடயமல்ல. 10ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளில், 8 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்துடன் தொடர்புடையவை. 545 பாலியல் துன்புறுத்தல்கள், 231 பெரும் பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் 38 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள், சிறுவயதுக் கர்ப்பங்கள், 3 கருக்கலைப்புகள், 9 சிறுவர் திருமணங்கள் என இந்த முறைப்பாடுகள் நீள்கின்றன. முறைப்பாடுகள் செய்யப்படாத இன்னும் பல நூறு சம்பவங்கள் இருக்கும் என்பதிலும் சந்தேகங்கள் இல்லை. சிறுவர்களுக்கு எதிரான இந்தச் சம்பவங்கள் எமது சமூகக் கட்டமைப்பிலும், சிறுவர்கள் பாதுகாப்புத் தொடர்பான சிந்தனைகளினதும் ஓட்டைகளையே வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

இந்த நவீன உலகில், அனைத்தும் டிஜிற்றல் மயமாகியுள்ள இந்தக் காலகட்டத்தில் சிறுவர்கள் ஆபத்துகளில் சிக்கிக்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமிருக்கின்றன. சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை, துஷ்பிரயோகங்களை, ஆபத்துகளைத் தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டும் என வாளாவிருக்கமுடியாது. இந்த விடயத்தில் அரசாங்கத்தினதும், பொதுமக்களினதும் கூட்டுப் பொறுப்பு மிக அவசியமானது. அந்தக் கூட்டுப் பொறுப்பை உணர்ந்து செயற்பட்டாலே நாட்டின் எதிர்கால வளங்களான சிறுவர்களை உடல், உள ஆரோக்கியத்துடன் உருவாக்கமுடியும். சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவர்களைத் தண்டிக்கும் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறியிருக்கின்றது. அந்தக் கட்டாயத்தை உணர்ந்து அரசாங்கம் செயலாற்றவேண்டியது அவசியம். அதேநேரம் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரங்களை இன்னும் வலுப்படுத்தவேண்டியதும் அவசியம். மறுபுறத்தில் பாலியல் ரீதியான தாக்குதல்களைச் சிறுவர்கள் தவிர்ப்பதற்கு பாடசாலை மட்டத்திலேயே பாலியல் கல்வி மற்றும் டிஜிற்றல் பாதுகாப்பு விழிப்புணர்வையும் ஏற்படுத்தவேண்டும்.

மறுபுறம், ஒரு சமூகமாக மக்களின் முன்னுள்ள பொறுப்பு இன்னும் பெரியது. ஒவ்வொரு பெற்றோரும் தங்களின் பிள்ளைகள் பாதுகாப்புடன் இருக்கின்றனர் என்ற மனோவோட்டத்தில் செயற்படுவதை விடுத்து, சமூகத்தின் அனைத்துச் சிறுவர்கள் தொடர்பாகவும் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும். அயல்வீட்டில், பாடசாலையில் அல்லது பொதுஇடங்களில் ஒரு குழந்தைக்கு அநீதி இழைக்கப்படும்போது, அதைக் கண்டு ஒதுங்கிச் செல்லாமல், தகுந்த அதிகாரிகளுக்கு அறிவிக்கின்ற தைரியம் ஒவ்வொரு பெற்றோருக்கும் இருக்கவேண்டும். இனிவரும் காலங்களில் இத்தகைய வன்முறைகள் நிகழாதிருப்பதை உறுதிசெய்வது அரசாங்கத்தின் முன்பாகவும் - மக்கள் முன்பாகவும் உள்ள கூட்டுப் பொறுப்பு. பாதுகாப்பான சூழலே குழந்தைகளுக்கு நாம் அளிக்கும் சிறந்த பரிசாகும் என்பதை உணர்ந்து அதற்கான கருமங்களை வாய்மொழியில் அல்லாது அனைவரும் செயலில் காட்டவேண்டும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### பொய்யாமொழி

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்

**பொருள்:** எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால் அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.



## சமூக ஊடகப் பயன்பாட்டில் சிறுவர்களுக்கு கட்டுப்பாடு!



### ஆலோசிக்கின்றது அரசாங்கம்

**கொழும்பு, ஜன.30**

**12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த கட்டுப்பாடு விதிப்பது தொடர்பில் அரசாங்கம் பரிசிலனை செய்கின்றது என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவதை முழுமையாகத் தடைசெய்ய அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. சமூக ஊடகத் தளங்களை அணுகுவதை தடைசெய்வதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. உலகம் முழுவதும் பல நாடுகள் ஏற்கனவே பாடசாலை மாணவர்களிடையே சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இலங்கையும் அத்தகைய மாதிரிகளை ஆராய்ந்துவருகின்றது-என்றார். (எ-இ)

## மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு.ஜன.30

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்றுப் பிரதேசத்துக்குட்பட்ட பன்குடாவெளி புலையவெளியில் நேற்று மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

வயல் பகுதியில் யானைக்கு பொருத்தப்பட்ட மின்சார வேலியில் சிக்கியே அவர்கள் உயிரிழந்துள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)



## நாமல் வழக்கு ஜூலையில்!

கொழும்பு, ஜன.30

பணமோசடித் தடுப்புச்சட்டத்தின்கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிரான முறைப்பாட்டின் அடுத்த விசாரணையை எதிர்வரும் ஜூலை மாதம் 30ஆம் திகதி நடத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் திட்டமிட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை கொழும்பு தலைமை நீதிபதி முன்பு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்குத் தொடர்பான சட்ட ஆலோசனை இன்னும் பெறப்படவில்லை எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்துக்குத் தெரிவித்ததையடுத்து விசாரணை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## போதைப்பொருள்களுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன.30

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தளுவகொட்டுவ பகுதியில் கொக்ஹெய்ன் மற்றும் குஷ் போதைப்பொருள்களுடன் இருவர் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 10 கிராம் 650 மில்லிகிராம் கொக்ஹெய்ன் போதைப் பொருளுடன் முதலாவது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இரண்டாவது சந்தேகநபர் 110 கிராம் மற்றும் போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

### இந்தாண்டில்

## 6 துப்பாக்கிச்சூடு; 5 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.30

2026ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 28ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 6 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் துப்பாக்கிச்சூடுகளில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 4 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

**நாளை** சனிக்கிழமை - தை 17

31.01.2026

சுபநேரம் : 03.36 – 05.06

ராகுகாலம் : 09.36 - 11.06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மைப் போட்டி

யாழ்.கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சுதந்திரன் சுதாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப்பணிப்பாளர் கந்தசாமி கண்ணன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் குண்டுமணி ரவிந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (க-17)

## கால்கோள் விழா

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழா வித்தியாலய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ச. அகிலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வரணி ஆசிரியர் வாண்மை விருத்தி விரிவுரையாளர் கே.குகதீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-41-159)

## மானிப்பாய் பிரதேசசபையில் வாசிப்பு மாத பரிசளிப்பு இன்று

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் சபையின் தவிசாளர் க. ஜெசீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.பார்த் தீபன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசன், ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் அதிபர் சி.மதிபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

**கொள்வனவு செய்யப்படும்**
நெல், தானியங்கள், தேங்காய், கொப்பறா, மில் தளபாடங்கள்
077 7722 215

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 09 1950 — மறைவு 29 01 2026

### நாகேஸ்வரி சபாநாதன்

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் வவுனியா 2ம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி சபாநாதன் 29.01.2026 வியாழக்கிழமை காலை கொழும்பில் இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், மகேஸ்வரியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் சபாநாதன் (City Trade Corporation) உரிமையாளர் அவர்களின் அன்பு மனைவியும், சுகந்தினி, குமுதினி, கலாஜினி அவர்களின் பாசமிகு தாயாரும், நவரட்ணராஜா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், திவ்யா, அருண், மாதங்கி, செந்தூரன், காயத்திரி ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 30.01.2026 காலை 7.00 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தார்
தொலைபேசி : 0718683886

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### பொன்னையா ஆச்சாரி சுந்தரவல்லி



5/2, வயல்கரை லேன், 4ம் ஒழுங்கை, முருகமூர்த்தி வீதி, யாழ்ப்பணத்தை பிறப்பிடமாகவம் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஆச்சாரி சுந்தரவல்லி அவர்கள் நேற்று (29.01.2026) வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஆச்சாரி - சீதாலட்சுமி தம்பதியரின அன்பு மகளும், காலஞ்சென்ற கமலவல்லி மற்றும் புஸ்பவல்லி ஆகியோரின் சகோதரியும், சண்முகவேல் ஆச்சாரியின் மைத்துனியும், சந்திரசேகரன், பாலா, சுரேஸ் கண்ணா ஆகியோரின் அருமை சின்னம்மாவும், யசிந்தா, சித்திரா, ரேவதி ஆகியோரின் மாமியாரும், நிசாந்தசேகரன், கஜனி, கார்த்தி ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/2, வயல்கரை லேன்,
4ம் ஒழுங்கை, முருகமூர்த்தி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
Tel:076 2536 025

CS 31108)A

## மரண அறிவித்தல்



### விசுவநாதன் பரமேஸ்வரி

தோற்றம் 18.04.1932 — மறைவு 24.01.2026

யாழ்ப்பாணம் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதன் பரமேஸ்வரி அவர்கள் கடந்த 24.01.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.சின்னத்தம்பி விசுவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்றவர்களான அன்னபூரணம், பொற்பதி மற்றும் பராசக்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெகராசசேகரம் (கனடா), கலாவாணி (அமெரிக்கா), கலாராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மலிங்கம் (அமெரிக்கா), சந்திரிக்கா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கவி, விதுர்சன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2026 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.

CS 60582) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாவட்டம் வடமராட்சி பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026

**திருச்சிற்றம்பலம்**
நாடு மிகவுடையாள் நெல்லண்டை எம் பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய் மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதி நலத்தாள் மலர்ந்தாள் சரண்.
**திருச்சிற்றம்பலம்**

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.01.2026 புதன் காலை 07.53 மணி முதல் | 29.01.2026 வியாழக்கிழமை காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை | 30.01.2026 வெள்ளிக்கிழமை காலை 07.32 - 08.06 மணி வரை |

**அன்பாளின் பக்த அடியார்களே!**

இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் முத்தாக நிகழும் இலங்காபுரியின் வடபுலத்தே சைவத்தமிழ் பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்கள் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணத்தின் வடமராட்சி தும்பளை நெல்லண்டை பதியில் இத்தி மரத்தடியில் அமர்ந்து இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன எல்லாம் கொடுத்தருளும் அன்னை வீரபத்திரமாகாளியம்மனுக்க நிகழும் சுபமங்களகரமான விசுவாவசு வருஷம் தை மாதம் 16ம் நாள் (30.01.2026) வெள்ளிக்கிழமை துவாதசி திதியும், திருவாதிரை நட்சத்திரமும், சித்தியோகமும் கூடிய காலை 07.32 - 08.06 மணிவரையுள்ள கும்ப லக்ன சுபவேளையில் எம்பெருமாட்டி வீரபத்திரமாகாளி அம்மனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் திருக்குடமுழுக்கு மஹா சாந்தி நிகழ அம்பாளின் திருவுள்ளம் கொண்டருளி உள்ளதால் இப்புனித நன்நாளில் அடியார்கள் புனித சீலர்களாக வருகை தந்து பெரும் சாந்தியை தரிசித்து திருவருள் பெற்று சீரும் சிறப்பாக சகல ஸ்ஸ்வரியமும் இகபர சுகவாழ்வு வாழ எல்லோரையும் வருக வருக என்று அன்புடன் அழைக்கின்றோம்.

## கும்பாபிஷேக கிரியா பூர்வ நிகழ்வுகள்

| | |
|---|---|
| தை திங்கள் 14ம் நாள் 28.01.2026 புதன்கிழமை | காலை 07.53 மணிமுதல் கர்மாரம்பம், விநாயக பூஜை, புண்ணியாகவாசனம், ஆச்சாரியவர்ணம், அனுக்ஞை, தனலஷ்மி, குபேர பூசை, திரவியசுத்தி, திரவிய வியாகம், பிரதிஷ்டா சங்கற்பம், கணபதி ஹோமம், பேரிடதாடனம், நவக்கிரக ஹோமம், கிராம சாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கன ஹோமம், திசா ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத் சங்கரணம் கங்கா தீர்த்தம், ஆதித்யாக்னி சங்கரணம், விபூதி பிரசாதம் வழங்கல். மாலை 03.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, அங்குரார்பணம், ரட்ஷாபந்தனம், நித்திய துவஜாரோகனம், கடஸ் தாபனம், கலா கர்ஷனம், சணஹோமம், யாக பூசை, நாவாக்னி விபர்ஜனம், பிரதான கும்பங்கள் யாக சாலைப் பிரவேசம், விஷேட பூசை, பூர்ணாகுதி, உபசார பூசை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், ஆசாரி வஸ்திர சம்பாவனை, முன் இரவு 07. 19 மணிமுதல் 08.06 மணிவரையுள்ள சிம்மலக்ன சுபவேளையில் தீபஸ்தாபனம், கோவாசம், தூபிஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் நடைபெறும். |
| தை திங்கள் 15ம் நாள் 29.01.2026 வியாழக்கிழமை | எண்ணைக்காப்பு 29.01.2026 காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை<br>காலை 08.30 மணி முதல் விநாயகர் வழிபாடு, விஷேட சந்தி, நித்திய துவஜா ரோகனம் பூசை, யாகசாலைபிரவேசம், யாக பூசை, நாவக்னி பூசை, காயத்திரி ஹோமம், விஷேட திரவிய ஹோமம், சகஸ்ர நாம ஹோமம், பூர்ணாகுதி வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்<br>மாலை 04.00 மணிமுதல் கணபதி பூசை விஷேட பஞ்சசௌவ்ய பூசை, பஞ்சாமிர்த பூசை, சோடஷ விம்ப சுத்தி பூசை, நித்திய துவஜா பூசை, யாகப்பிரவேசம், யாக பூசை, நவாக்னி பூசை, ஹோமம், திரிசதி நாம ஹோமம், மூர்த்தி விம்பசுத்தி அபிஷேகம், மூர்த்தி ரட்ஷாபந்தனம், பூர்வாங்க துவார பூசை, சாங்க சடத்துவ நியாசம், பரிவார பரிசாகுதி, நவகுண்ட பரிசாகுதி, பூரணாகுதி, விஷேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், சிவாச்சாரியவஸ்திர சம்பாவனை விபூதி பிரசாதம், வழங்கல். |
| தை திங்கள் 16ம் நாள் 30.01.2026 வெள்ளிக்கிழமை | அதிகாலை 04.30 மணிமுதல் சித்தி விநாயகர் பூசை, புண்ணியாக வாசனம், நித்திய துவஜா பூசை, உபசார தீபாராதனை, சதுர் வேத ஹோமம், ஸ்தோத்திர கீர்த்தனை திருமுறை ராக தாள, சாங்க, சகண்டி, நர்த்தன சமர்ப்பணம். அனந்த கோடி நமஸ்காரம், அந்தர்பலி, பகிர்பலி, தானாதிகள், சர்வமங்கள வாத்திய ஹோச சகிதம் பிரதான கும்ப புறப்பாடு, காலை 07.32 தொடக்கம் 08.06 வரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேகம், திருக்கதவம் காப்பிடல், யாக உத்வாசனம், தசமங்கள தரிசனம், ஆச்சாரிய சம்பாவனை. ஆசியுரை, மகா அபிஷேகம், விசேட பூசை அன்னதானம், நடைபெறும் |

## கும்பாபிஷேக குருமார்கள் விபரம்

விண்ணில் இருந்து அருள்ஆசி வழங்கும் நெல்லண்டை பத்திரகாளி அம்மன், வீரமாகாளி அம்மன், பரம்பரை பூசகர், ஆதீனகர்த்தா தேவஸ்தானாதிபதி அமரர் தியாக.சோமாஸ் கந்த ராஜாக் குருக்கள், அமரர் வே. இராமலிங்கக்குருக்கள் ஆசியுடன்

**கும்பாபிஷேக பிரதமகுரு**
"சிவாகம கிரியாமணி தேவிபூஜா துரந்தர்"
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தனஞ்சயக்குருக்கள்**
(பரம்பரை குருக்கள், ஆதீன கர்த்தா பிரதமகுரு)
நெல்லண்டை பத்திரகாளி அம்மன், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

"அம்பாள் நித்திய பூஜாதுரந்தரர்"
**சிவஸ்ரீ. இராம சுந்தரலிங்கக்குருக்கள்**
பிரதமகுரு ஆதினகர்த்தா நெல்லண்டை பத்திரகாளி அம்மன்

ஆலய நித்திய உதவி அர்ச்சகர்கள்
சிவத்திரு. சுந்தர. விபூசன் ஐயா
சிவத்திரு சுந்தர். திரிஷ்யந்த் ஐயா

**சர்வபோதகாச்சாரியர்**
சிவஸ்ரீ.பா.பாலமனோன் குருக்கள்

**நவகுண்ட குருமணிகள்**
சிவஸ்ரீ.வே.யோகராசாக் குருக்கள்
சிவஸ்ரீ.வை.சிவராசாக்குருக்கள்
சிவஸ்ரீ.சி.சுகராசாக்குருக்கள்
சிவஸ்ரீ.வை. இராமேஸ்வரக்குருக்கள்
சிவஸ்ரீ.பா.மனோகரக்குருக்கள்
சிவஸ்ரீ.இ.கிரிசாந்தக் குருக்கள்
சிவஸ்ரீ.ந.சிவகர்ஷக்குருக்கள்
சிவஸ்ரீ.சிவதாசக்குருக்கள்
சிவஸ்ரீ.முருகதாசக் குருக்கள்
சிவஸ்ரீ.வி.விக்னேயராக் குருக்கள்
சிவஸ்ரீ.ச.கஜமுகக்குருக்கள்

**வேதம்**
"ஆகமவேத வித்வன்னர்"

**சாதகாசிரியர்கள்**
சிவஸ்ரீ. இ.கனேஸ்வரக் குருக்கள்
"சாதக சாகரம்"
சிவஸ்ரீ. பா. நரேந்திராக் குருக்கள்
சிவஸ்ரீ. பா.நகுலேஸ்வராக் குருக்கள்

**உதவி அர்ச்சகர்கள்**
சிவத்திரு.இ.கனேசலிங்கம் ஐயா
சிவத்திரு.பிரசன்னா ஐயா
சிவத்திரு.நி.நிமல்ராஜ் ஐயா (வல்லை)
சிவத்திரு.எ.எழில் ஐயா
சிவத்திரு.ஞா.துவாரகன் ஐயா
சிவத்திரு.க.பவித்திரன் ஐயா

**அருள் ஆசி வழங்கும் குருமணிகள்**
சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
சிவஸ்ரீ.வே.தியாகராசாக் குருக்கள்

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவர்கள்**
சிவஸ்ரீ சண்முகரத்தினக்குருக்கள்
சிவஸ்ரீ திருஞானசம்பந்தக்குருக்கள்
சிவஸ்ரீ ச. பிரசன்னாக்குருக்கள்

| வர்ண வேலை | கட்டடவேலை | கூரை வேலை | சிற்பாசாரியார் | தெறோசோ பதித்தல் | ஒலி ஒளி அமைப்பு | சுவாமி அலங்காரம் | மங்கள வாத்தியம் |
|---|---|---|---|---|---|---|---|
| தரன் ஆட்ஸ் | செல்வக்குமார் தும்பளை | கி. விஜயராசா வாலிகண்டி | க. தர்ஸ்கரன் அராலி | கி. மோகனசுந்தரம் | இ. பரமதாஸ் தும்பளை | வை. ரங்கேஸ்வரன் | சிவசுப்பிரமணியம் குழுவினர் |

குறிப்பு: கும்பாபிஷேகதினத்திலும் அதற்கு முன்னதாக நடைபெறும் கிரிகைகளிலும் கலந்து கொண்டு தங்களாலான சிவந்திரவியங்களை கொடுத்தும் அம்பாளின் இஷ்ட சித்திகளையும் பெற்று வாழ்வில் சீரும் சிறப்புடன் வாழ்வீர்களாக

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 45 நாட்கள் நடைபெறும்
"அம்பிகை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

இங்ஙனம்
தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
பிரதமகுருக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா

யாழ்., ஜன.30 சைவபரிபாலன சபையினால் அமைக்கப்பட்டுள்ள நாவலர் சோலை முன்பள்ளியின் கட்டடத் திறப்பு விழா சைவபரிபாலன ஆச்சிரம மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணிதப் பேராசிரியர் துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் தம்பிராசா சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 01 . 1941



மறைவு 15 . 01 . 2022

### அமரர் முருகையா நகுலேஸ்வரன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: திரியோதசி

கண்ணுக்கு நிலவாய் நெஞ்சத்தில் அன்பால்
மண்ணில் என்றும் எங்களோடு
கண்கண்ட தெய்வமாய் வாழ்ந்து
விண்ணுக்கு வாழச் சென்று நான்கு வருடமாகிறது

185/1, கில்னர் லேன்
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 221 6742

## அந்தியேட்டி, ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 03.01.2026 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் இராஜலட்சுமி நகுலேஸ்வரன்

(ஆசிரியர், யா/ இணுவில் இந்துக்கல்லூரி, இணுவில்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.01.2026) சனிக்கிழமை அதிகாலை 08.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நிறைவுபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் (02.02.2026) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் "சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான மண்டபத்தில்" நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் துயரில் பங்குகொண்டு அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்கள், இறுதிக்கிரியை நிகழ்வின்போது கண்ணீர் அஞ்சலி பதாதைகள், சுவரொட்டிகள், மலர்வளையங்களினை கொண்டு வந்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வலிகாமம் வலய தமிழ்பாட ஆசிரிய ஆலோசகர்கள், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(CS/60584) J-1

குடும்பத்தினர்

குரு சரணம்



உலகெங்கும் ரெய்கி வகுப்புகள் மற்றும் பல ஆன்மீக பயிற்சி வகுப்புகள் எடுத்து வரும்,
**International Reiki Grand Master**
அம்மா **Dr. Meenakshi A** M.B.B.S., DGO.,
அவர்களின் இலங்கை விஜயம்

**வரும் ஜனவரி 24 முதல் பிப்ரவரி 15 வரை**
**கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில்**
**உங்களை நேரில் சந்தித்து,**
**தீட்சை தர உள்ளார்கள்**



வாழ்க்கை பிரச்சினைகளிலிருந்து நம்மை விடுவித்து வாழ்வை வளமாக்கும் ரெய்கி தீட்சை பெற்று வாழ்வில் மேன்மை பெறுங்கள்!

ரெய்கி 1 & 2 மற்றும் தெய்வீக கலைகள் பயிற்சி பற்றிய விவரங்களுக்கு

**0772 382 566**

என்ற எண்ணிற்கு Whatsapp-ல் தொடர்பு கொள்ளுங்கள்.

நயினாதீவு



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் "தைப்பூசத் திருவிழா"



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் "தைப்பூசத் திருவிழா" மிகவும் சிறப்புற நடைபெற அன்னையின் திருவருள் பாலித்துள்ளது. எதிர்வரும் 01.02.2026ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30 மணிக்கு அம்பிகைக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்று அதைத் தொடர்ந்து உச்சிக் காலப் பூசையும் வசந்தமண்டப பூசையும் இடம்பெற்று வேத தோத்திர திருமுறை பாராயணங்கள் நிறைவு பெற்றதும் விசேட மங்கள வாத்திய சகிதம் அம்பிகை மதியம் 1.30 மணியளவில் அழகிய திருமஞ்சத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அருட்காட்சி இடம்பெறும்.

* அடியார்களுக்கான விசேட பேருந்து படகுச்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
* அடியார்களுக்கான தாகசாந்தி தம்பையா தாகசாந்தி நிலையத்தினரால் வழங்கப்படும்.
* அடியார்களின் அரும்பசி தீர்க்கும் அன்னதானப்பணி ஆலய தினசரி அன்னதான மண்டபத்திலும், ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான மண்டபத்திலும் நடைபெறும்.
* அபிஷேகத் திரவியங்கள். பால், இளநீர் வழங்க விரும்பும் அடியார்கள் மு.ப.11.00 மணிக்கு முன் ஆலயத்தில் வழங்கவும்.

**தைப்பூசத்திருநாளில் அன்னையின் ஆலயம் வந்து தரிசித்து அவளின் திருவருட் பேரருளை பெற்றேகுமாறு அன்போடு அழைக்கிறோம்.**

"மைப்பூசும் ஒண்கண்மட நல்லார் மாமயிலை
கைப்பூசு நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்.
தைப்பூசம் காணாமல் போதியோ பூம்பாவாய்" - (தேவாரம்)

31.01.2026 சனிக்கிழமை அம்பிகையின் ஆலய மகா கும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும் பூசை ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறும்

அன்னையின் பணியில்
ம.அம்பிகைபாகன்
கௌரவ செயலாளர் - அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(CR 46980) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







2026 ஜனவரி 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, சுன்னாகத்தின் மையப்பகுதியில், **PMF பினான்ஸ் பீஎல்சி,** தனது புதிய கிளையைத் திறந்து வைக்கிறது என்பதை சுன்னாகம் பிரதேச மக்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறது.

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு, துரிதமான மற்றும் மிகச்சிறந்த சேவைகளை வழங்க நாம் எப்போதும் காத்திருக்கிறோம். மேலும், அவர்களின் தேவைகளையும், அபிலாசைகளை பூர்த்தி செய்யவும், அதற்கு உதவி புரியவும் எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறோம்.

- நிலையான வைப்புகள்
- சேமிப்புகள்
- குத்தகை
- வரைவுகள்
- நிலையான சொத்து விற்பனை
- வர்த்தகக் கடன்கள்
- அடைமானக் கடன்கள்
- தொழில்முனைவோர் நிதி வசதிகள்
- பிணைய வர்த்தகம்
- தங்க ஆபரணக் கடன்கள்

**துரித இலக்கம்:**
**0217 389 001**

pmf finance
"Your Trusted Path-Maker"

**PMF FINANCE PLC**
இல. 48, முகந்திரம் நாராயனர் வீதி,
சுன்னாகம்.
மின்னஞ்சல்: info@pmf.lk
வலைத்தளம்: www.pmf.lk

www.skillsads.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்காலத்துக்குப் பயன் தரும்வகையில் முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும்.

**கன்னி:** சகோதரர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். புதிய டிசைனில் ஆடைகள் வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மகரம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். சிலருக்குக் குடும்பம் தொடர்பான பணிகளுக்காக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

# 16 முதல் 22 வயதுக்குட்பட்டோரிடம் அதிகரிக்கும் குற்ற நடவடிக்கைகள்

## விசேட மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.30**

**கடந்த 10 ஆண்டுகளில் 16 முதல் 22 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களின் குற்றவியல் நடத்தைகள் பெரியளவில் அதிகரித்துள்ளன என்று தடயவியல் மனநல விசேட மருத்துவ நிபுணர் தாரக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2015 மற்றும் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், நீதிமன்ற விசாரணைகளின் மூலம் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. இதே நிலை நீடித்தால், எதிர்காலத்தில் நாட்டின் சிறைச்சாலைகள் 16 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களாலேயே நிரம்பி வழியும்.

மனநலப்பாதிப்பு உள்ளவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்ற சமூகக்கருத்து முற்றிலும் தவறானது. குற்றச்செயல்களில் ஈடுபடும் இளைஞர்களிடம் ஆக்கபூர்வமான திறமைகள் உள்ளன. முறையான அறிவியல் சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வுமூலம் அவர்களை நல்வழிப்படுத்தமுடியும்.

தெற்காசியாவிலேயே மிகப்பெரிய தடயவியல் மனநலப் பிரிவு இலங்கையில் அமைந்துள்ளது.

ஒரு குற்றத்தைச் செய்யும்போது நபரின் மனநிலை எவ்வாறு இருந்தது, அவர்களால் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கமுடியுமா? மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாமா? போன்ற விடயங்களை இந்தப் பிரிவு ஆராய்கின்றது - என்றார். (எ-இ)

# யாழ்ப்பாணத்தில் முத்தமிழ்ப் பெருவிழா

யாழ். குரலோசை நுண்கலைகளின் தாயகத்தின் ஏற்பாட்டில் முத்தமிழ்ப் பெருவிழா நாளை சனிக்கிழமை தொடக்கம் 4 நாள்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வீரமணிஐயர் கலையரங்கில், மாலை 5 மணி தொடக்கம் 8மணி வரை நடைபெறவுள்ளது. நிகழ்வில் பேராசிரியர் க.மகேஸ்வரன், கவிஞர் சோ.பத்மநாதன், தண்ணுமைவேந்தன் மா.சிதம்பரநாதன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

குழு, தனியிசைக் கச்சேரிகள், பரதநாட்டியம், கவியரங்கு, கூத்து, இசைநாடகப்பாடல்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். நிகழ்வுகள் பெரும்பாலானவை ஈழத்தின் தமிழிசையை அடிப்படையாகக் கொண்டவை என்றும், குரலோசையின் 10 ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்றும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-100)

# கருத்துரையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ். சமூக விஞ்ஞானப்படிப்பு வட்டம் மாதாந்தம் நடத்திவரும் போயா தினச் சிறப்புக் கருத்துரையும், கலந்துரையாடலும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள தேசியகலை இலக்கியப்பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'அமெரிக்காவின் வெனிசுலா மீதான ஆக்கிரமிப்பும், அதன் போலி ஜனநாயகமும்' எனும் தொனிப்பொருளில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் செயலாளர் கு.க.சாரங்கன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும். (க-66)



# இணுவில் இந்துக்கல்லூரியின் புதுமுக மாணவர்களுக்கு உதவி


யாழ்ப்பாணம்,ஜன.30

இணுவில் இந்துக் கல்லூரியில் தரம் 1 இல் புதிதாக இணைந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், தலா 16 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இணுவில் பொதுநூலகத் தகவல் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில், பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இணுவில் பொதுநூலகப் போசகர் இரா.அருட்செல்வம், இணுவில் இந்துக்கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி மிருளாயினி சிவராமகிருஷ்ணனிடம் கற்றல் உபகரணங்களைக் கையளித்தார். இணுவில் பொதுநூலகக் கனடா அமைப்புக்குழுவின் நிதி அனுசரணையில், 3 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டன. ([illegible])

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
08 . 01 . 1936



மறைவு
28 . 12 . 2025

28.12.2025 அன்று சிவபதமடைந்த

**அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம்**

(முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி)

அவர்களின் அஞ்சலி நிகழ்வு நாளை (31.01.2026) சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் பலாலி வீதியில் அமைந்துள்ள உரும்பிராய் கற்பக விநாயகர் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெறும்.

எமது இழப்பையறிந்து சரீர உதவிகளை வழங்கி பக்க துணையாய் இருந்தவர்களுக்கும், நேரில் வருகை தந்தவர்களுக்கும், முகநூல் மற்றும் தொலைபேசி ஊடாக துயரை பகிர்ந்தோருக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், அதனை சிறப்பித்த கல்லூரி சமூகத்தினருக்கும், அஞ்சலி பிரசுரங்கள், அஞ்சலி உரைகள், மலர் வளையங்கள் மூலம் தமது அனுதாபத்தை தெரிவித்த அனைவருக்கும் நன்றிகள்.

இந்த அறிவிப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வில் பங்கேற்று அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கோப்பாய் வீதி,
உரும்பிராய்.**

**குடும்பத்தினர்.
076 8257 881**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாணய...

யுள்ளன. ஐந்தாம் கட்டக் கடன் வழங்குகைக்காக சர்வதேச நாணய நிதியத்தின் விசேட குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. அந்தக் குழுவினர், ஜனாதிபதி அநுரவுடன் நேற்று நடத்திய சந்திப்பின்போதே, நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளார் என்ற விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும், இலங்கைக்கான உதவித் திட்டங்களை விரிவாக்கம் செய்வதிலும் நாணய நிதியம் அதிக அக்கறையுடன் செயற்படுகின்றது. இலங்கைக்கான கடன் வசதிகளை விரிவாக்கவும், இலகுவாக்கவும் நாணய நிதியம் தயாராக உள்ளது என்றும் அந்தக் குழுவினர் ஜனாதிபதி அநுரவிடம் கூறியுள்ளனர்.

நாணய நிதியத்தால் இதுவரை இலங்கைக்கு நான்கு கட்டங்களாக கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாவது கடன் தவணைக்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. ஆதலால், நாணய நிதியத்தின் பணிப்பாளரின் இலங்கைப் பயணத்தின் போது, ஐந்தாம் கட்டக் கடன் விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஊட க...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் ஆக்கப்படல்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விசாரணைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுடன், ஆதாரங்களும் கிடைத்துள்ளன. எனவே, இந்த விடயம் தொடர்பில் விரைவில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஊடகவியலாளர்கள் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தே தீரும் - என்றார். (அ-ம-26)

## தமிழரசின்...

மாவை சேனாதிராஜாவின் முதலாம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டே இந்தச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது. இதைத் தொடர்ந்து, யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதம அறங்காவலர் சா.செ.இளங்கோவன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நினைவுப்பேருரைகளைத் தொடர்ந்து மாவை சோ.சேனாதிராஜாவின் முதலாமாண்டு நினைவுமலர், பேராசிரியர் பாஞ்.இராமலிங்கம் எழுதிய 'ஈழ அண்ணல் சோ.மாவை சேனாதிராஜா' ஆகிய இரு நூல்களும் வெளியிடப்படவுள்ளன. (அ-ம-66)

## இன...

இலங்கையின் 78ஆவது சுதந்திர தின விழாவுக்குரிய ஏற்பாடுகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

'உண்மையான சுதந்திரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிலையான சமாதானம் அவசியம். இதற்கு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ஏற்படாமல் எம்மால் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது.

நாட்டில் மீண்டும் இனவாத மோதல் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது. தேசிய சமத்துவம் கட்டியெழுப்படும். உண்மையான சுதந்திரம் நிலை நிறுத்தப்படும். சிறப்பானதொரு நாட்டை உருவாக்கவும், வளமானதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் - என்றார். (அ-ம-44)

## தீக்...

(வயது-81) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கடந்த 17ஆம் திகதியன்று குப்பை கொளுத்தியபோது தீ வீட்டின் மீது பற்றியதால், அந்த மூதாட்டி காயங்களுக்கு உள்ளாகியிருந்தார். இதையடுத்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## திஸ்ஸ...

நாளை மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையும், பௌர்ணமி நாளான நாளைமறுதினம் காலை 7 மணிமுதல் மாலை 6 மணி வரையும் போராட்டம் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறு போராட்ட ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-66-100-26)

## யாழ்ப்பாணம்...

வருகின்றது. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் நாட்டின் பல்வேறு நகரப் பகுதிகளிலும் உள்ள குளங்கள், நீரேந்து பகுதிகள் மற்றும் வடிகால்களை சீரமைப்பதில் தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே, கொழும்பில் இருந்து வந்துள்ள குழுவொன்று யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. (அ-ம-26)

## தலைவர்...

கப்பட்டது. எனினும், இதுவரை அதற்கான பதில் வழங்கப் படவில்லை. நகரசபை நடைமுறைகளுக்கு அமைவாக விண்ணப்பிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் அந்தப் பதில் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், எனது காணிக்குரிய கட்டட அனுமதி மட்டும் இன்னமும் வழங்கப்படாமை ஏமாற்றகரமானது. எனவே, அந்தக் கட்டடத்துக்கான அனுமதியை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றுள்ளது.

இதேவேளை, தேசியத் தலைவர் பிறந்து வளர்ந்த காணியில் அதன் வரலாற்று தனித்தன்மையை மாற்றியமைக்கும் வகையில் குறித்த கட்டுமானத்தை மேற்கொள்ளக்கூடாது என வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## டிப்பர்...

இருந்து பளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார்சைக்கிளும், பளையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த டிப்பருமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளன. டிப்பரின் சாரதியான 33 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-113)

## சர்வதேசப்...

ஏற்பாடுகள் தொடர்பில் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திர தின விழாவுக்காக 100 மில்லியன் ரூபா வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், குறைந்த செலவில் சுதந்திர தினத்துக்குரிய கம்பீரத்தன்மை குறையாமல் அதனை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த முறை சுதந்திர தின விழாவுக்கு 69 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. எனவே, இம்முறையும் அந்த செலவுக்குள் நிகழ்வை நடத்த முடியும்.

சுதந்திர தின விழாவுக்கு சர்வதேசப் பிரமுகர்கள் எவரும் அழைக்கப்படவில்லை. கொழும்பிலுள்ள தூதுவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் வெளிவிவகாரத்துறையுடன் தொடர்புடையவர்கள் மட்டுமே பங்கேற்பார்கள் - என்றார். (அ-ம-44)

## நன்கு...

அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மாகாவலி அதிகார சபையால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைய, கிவுல் ஓயா நீர்த்தேக்கமானது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தமிழர்களின் பூர்வீக கிராமங்களுக்கு அண்மையாக அமைக்கப்படவுள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும். மகாவலி அதிகார சபை தனது திட்ட அறிக்கையில் வெளிப்படையாகவே இந்த நீர்த்தேக்கத்தின் பயனாளிகள் 3 ஆயிரத்து 203 சிங்களக் குடும்பங்கள் எனத் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தால் பாரம்பரிய தமிழ் கிராமங்களான வெடிவைத்த கல்லு, ஈச்சங்குளம், கூழாங்குளம், காஞ்சூரமோட்டை போன்ற கிராமங்களின் 400 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் நீரினுள் மூழ்கும் நிலை காணப்படுகின்றது. மேலும் 47 தொல்லியல் பிரதேசங்களும் கிவுல் ஓயாவினுள் மூழ்கிப் போகவுள்ளன என்பதனை மகாவலி அதிகார சபையின் திட்ட அறிக்கையின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்தத் தகவல்கள் அனைத்தையும் மூடிமறைத்துள்ள கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், 'தமிழ் அரசியல்வாதிகளின் கருத்துக்கள் பொய்' என்று கூறியுள்ளார். அவரின் இந்தக் கருத்தை தமிழர் மரபுரிமைப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. இவர்கள் வடக்கில் மக்களை அரவணைப்பது போல நாடகமாடி முதுகில் குத்தும் வேலையை கச்சிதமாகச் செய்து வருகின்றார்கள்.

இலங்கைத் தீவில் நிலையான அபிவிருத்தி, சமாதானம், சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் இவ்வாறான திட்டமிட்ட இன அழிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் எந்த விட்டுக்கொடுப்பும் இல்லாமல் போராடுவார்கள் - என்றுள்ளது. (அ-ம)

## 'பிரஜா...

எதிராக, வடக்கு - கிழக்கு மாகாணங்கில் உள்ள பல்வேறு உள்ளாட்சி சபைகளில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், பருத்தித்துறை பிரதேசசபையிலும் அத்தகைய தீர்மானமொன்று நேற்றுக் கொண்டுவரப்பட்டது.

தவிசாளர் யுகதீஸால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்துக்கு, தேசிய மக்கள் சக்தியினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். 'அரச உத்தியோகத்தர்கள் அரசாங்கத்துக்கு உண்மையாக இல்லை, அவர்கள் மீது நம்பிக்கையில்லாத காரணத்தால்தான் பிரஜா சக்தியை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது' என்ற சர்ச்சைக்குரிய கருத்தை தேசிய மக்கள் சக்தியினர் முன்வைத்தனர்.

இதையடுத்து, அரச ஊழியர்களை அவமதிக்கும் வகையில் இந்தக் கருத்து அமைந்துள்ளதாகக் கூறி ஏனைய கட்சியினர் தமது கண்டனத்தைப் பதிவுசெய்தனர். இறுதியில் வாக்கெடுப்பு மூலம் பிரஜா சக்தி திட்டத்துக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (அ-ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதியில் தைப்பூச வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.30

செல்வச்சந்நிதி ஆலயத்தில் தைப்பூசத் திருநாளை முன்னிட்டு, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தைப்பூச வழிபாடுகள் ஆரம்பமாகும். அன்றைய தினம் ஆலயத்தில் திருமண வைபவங்கள் மற்றும் சுபகாரியங்கள் ஆரம்பித்து வைக்கப்படும். (சு-17)

# தைப்பூசத் திருவிழா

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா மற்றும் மணவாளக்கோல விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை சிறப்புப் பூசை அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

நண்பகல் மகேஸ்வரபூசை இடம்பெற்று, மாலை 5 மணிக்குச் சிறப்புப்பூசை மற்றும் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று, முருகப்பெருமான் மஞ்சத்தில் ஆரோகணித்து வீதிவலம் வருவார். (சு-17)

◆◆◆◆

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பூசை, அபிஷேகத்துடன் வழிபாடுகள் இடம்பெறும். தொடர்ந்து காலை 11 மணிக்கு சுவாமி வீதிவலம் இடம்பெறும். (சு-17)

# சொற்பொழிவு

தெல்லிப்பழை மாவைகலட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். பரஞ்சோதிமுனிவர் குருபூசையை அடுத்து, மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப் புலவர் பிரசங்கச் சக்கரவர்த்தி கந்த. சத்தியதாசனின் தருமிக்குப் பொற்கிளியருளிய படலம் எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும். (சு)

# ஏகாதசி உற்சவம்

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவிலில் வீம ஏகாதசி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை அதிகாலை வரை இடம்பெறவுள்ளது. (ச-41-9)

## மரண அறிவித்தல்



**கருப்பையா ராஜகுமாரன் (குமார்)**

தோற்றம் 12.09.1971 — மறைவு 24.01.2026

அவர்கள் கடந்த (24.01.2026) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தயாநிதி அவர்களின் அன்புக் கணவரும், யோயல், அபிஷா, காலஞ்சென்ற அபிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.01.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் நடைபெற்று எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை, வசந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 125/40 AV வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 638 4250,
077 420 6571

(CS/60587) J-1

## மரண அறிவித்தல்



மண்ணில் 1973.11.21 — விண்ணில் 2026.01.27

**செபஸ்தியாம்பிள்ளை அன்ரனி ஜோஜ் (குமார்)**

[முன்னாள் மு/முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், யாழ்.கோப்பாய் தெற்கு கலவன் பாடசாலையின் ஆசிரியரும், முன்னாள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளரும், தற்போதைய துணுக்காய் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர்] (SLEAS - II)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை அன்ரனி ஜோஜ் அவர்கள் 27.01.2026 செவ்வாய்க்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் செபஸ்தியாம்பிள்ளை (நோபட்), மேரிமலர் றோசா (மலர்) ஆகியோரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் ருக்குமணி (தவமணி) ஆகியோரின் அன்பு மருமகனும், பவுசியாவின் ஆசைக்கணவரும், மேரி பிறிஸ்சில்டா (சியானா, லண்டன்), பிறின்ஸ்சியாம் (University of Moratuwa - E25), பிறின்ஸ்சிறோன் (மாணவன், மாங்குளம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனார்த்தனன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், ஆருத்திரா (லண்டன்) அவர்களின் பாசமிகு பேரனும், வசந்தி (லண்டன்), மாலா, லதா, கண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரனும், சந்திரபோஸ் (லண்டன்), ஜீவா, உதயன், சுஜிதா (பிரான்ஸ்), றோய், றெஜி, றொபின்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க அஞ்சலி நிகழ்வு 30.01.2026 வெள்ளிக்கிழமை இன்று பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அடைக்கலநாயகி கோவில் வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 05 . 1946 — மறைவு 28 . 01 . 2026



**நாகராஜா ராஜேஸ்வரி (பொன்னம்மா)**

(ஓய்வுபெற்ற யாழ். Central Nursing Home ஊழியர்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா ராஜேஸ்வரி (பொன்னம்மா) (ஓய்வுபெற்ற யாழ். Central Nursing Home ஊழியர்) கடந்த 28.01.2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான சரவணமுத்து நாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா, சந்திரராணி (தங்கா) மற்றும் யோகராசா, தர்மராசா ஆகியோரின் பாசமிகு மைத்துணியும், காலஞ்சென்றவர்களான பிறேமநிகுலா, கமலராசா (கரன்) மற்றும் மோகனராசா (மோகன்), தங்கேஸ்வரராசா (குறுமன்) ஆகியோரின் அன்புத் தாயும், ரவீந்திரன், இந்துமதி, சந்திரிக்கா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரகலாதன் (நிகுலன்), கம்சனா, பிரகாஷ், பிரியா, துவாரகா, நிரோஜன், ஆரணி ஆகியோரின் அன்பு மிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பூமகள் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

11/12, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 6474 629
076 2629 547

(CS 31111) A


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் புளியம் வீதி முகப்புடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

- யாழ்ப்பாண பஸ் நிலையம் 3 1/2 km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 350 m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

**தொடர்பு:- 076 860 2770
076 987 8617**

(CS 31113) A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.